தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 மடங்கல் (31-8-1989) ஓர் உருபா (இதழ் எண்: 127)

பொழிலன், முகிலன் இருவரும் உதகைக் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றவாளிகளாக ஆக்கப் பெற்று, மேலும் சிறை வைக்கப் பட்டனர்!

தேசியப் பாதுகாப்புச் சட்டம் முடியும் தறுவாயில் அரசின் கொடுமையான நடவடிக்கை!

இருவரும் இப்பொழுது கோவைச் சிறையில்!

தமிழக விடுதலைப் போராளிகள் சிலர், கொடைக்கானல் குண்டு வெடிப்பு, சென்னை நேரு குண்டு வெடிப்பு வழக்குகளில் தளைப்படுத்தப் பெற்றுக் கடந்த ஓராண்டுக்கு மேலும் மதுரை நடுவண் சிறையில் இருந்து வருவது அனைவரும் அறிந்ததே!

அவர்களுள் 14 பேர் முன்னரே பல்வேறு கால கட்டங்களில், காவல்துறையினர் குற்ற அறிக்கை கொடுக்காததை முன்னிட்டுத் தம் தம் சொந்தப் பொறுப்புகளில் விடுக்கப் பெற்றனர்.

ஆனால், இளங்கோ, பொழிலன், முகிலன் ஆகிய மூவர் மதுரை நடுவண் சிறையிலும், பாண்டியன், சுப்பிரமணியம், நாராயணன் ஆகிய மூவர் கோவை நடுவண் சிறையிலும் தேசியப் பாதுகாப்புச் சட்டச் சிறையாளிகளாக இருந்து வருகின்றனர். அவர்களுள் இளங்கோ மட்டும் கடந்த 28-6-89 அன்று ஓராண்டு முடிந்து, தம் பொறுப்பில் வெளியே விடப் பட்டார்.

அதேபோல் பொழிலன், முகிலன் இருவர்க்கும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் ஓராண்டுப் பிடிப்பு, கடந்த 31-8-89 ஆம் பக்கலுடன் முடி-வடைந்தது. எனவே அவர்கள் 1-9-89 முதல் ஏற்கனவே கொடைக்கானல் வழக்கு மன்ற நடுவர்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு.

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்

மடல் : 14

மதுரை, நடுவண் சிறை
25-1-89

பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு, வணக்கங்கள்,

தங்களின் ஓய்வின்மையே மடல் எழுதாமைக்கான காரணமாக இருக்க இயலும் என எண்ணி அமைகிறோம். அச்சகத்தின் பணிச்சுமை மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டே இருக்கும் என எண்ணி மிகவும் வருந்துகிறோம்.

இந்நிலையில், அண்மைத் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.கழகத்தைப் பற்றியும், அதில் வெற்றி பெற இருக்கிற......அவர்களையும் எண்ணுகிறேன். உண்மையில் ஓர் உண்மை உள்ளம் என்பது எத்துணை உறுதியாக இருக்க வேண்டியுள்ளது!

நம் அடிமைத்தனத்தை நன்கு உணர்ந்து, அதற்கு மக்களின் அடிமைத்தளை விடுதலைக்கு ஆன ஆக்கமான பணிகளைச் செய்வதாகத் தங்களுடன் துணை நின்று, வாழ்க்கையைத் தொடங்கியவர்கள், இன்றைக்கு அரசியலில் நடுவணரசு ஈயும் (பிச்சைக்) காசில் வயிறு வளர்க்க நத்திப் பிழைக்கிற, மக்களை ஏய்த்துப் பிழைக்கிற வாழ்வில் அமர்ந்து கொண்டிருக்கிற போலிகளை என்னவென்று உரைப்பது!

“என்றும் போல் தேர்தல் வரும்...” எனும் பாடல் வரிகளைப் பயின்ற அவ்வுள்ளங்கள் தாம், இன்றைக்குத் தமிழ் மக்களை நத்திப் பிழைக்கும் பிழைப்பில் முங்கி இருக்கின்றன. ஆயினும் இதையெல்லாம் எண்ண எண்ண உண்மை உள்ளுணர்வுகள் மேலும் உறுதிப் படுகின்றன.

“இன்றைக்கே எழாமல், நீ,
என்றைக்குத் தான் எழுவாய்?
எண்ணிப் பார்ப்பாய்!”

—எனத் தமிழினத்தைக் கண்டு, கேள்வி கேட்க வேண்டுமான சூழல் மீண்டும் வந்துள்ளது. தங்களின் தனிமையான அரும்பணியையும் தாங்கள் தனித்து உழன்று கொண்டிருப்பதுமான நிலைகளையும் எண்ணி மிகவும் வருந்திக் கொண்டுள்ளோம். தங்களின் அரும்பணிக்குத் துணை நின்று செயலாற்றத் துடித்துக் கொண்டுள்ளோம்.

பணிவன்புடன், —மா, பொழிலன்.

அன்புள்ள அம்மா,

தாங்களும் பிறையும் எழுதிய மடலும், செந்து எழுதிய தனி மடலும், நேற்று கிடைத்தன. மிக மகிழ்வுடன் படித்தோம். படித்து முடிக்கிற பொழுது, செந்து வெளிநாட்டில் போய் இறங்கியிருந்திருப்பாள். அக் காட்சியை அப்படியே எம் மனக்கண்களில் பார்த்துக் கொண்டேன். சென்ற முறை நாங்கள் அவளை வழியனுப்பி வந்த நிலைகளையும் அவள் அழுது கொண்டு சென்ற காட்சியினையும் எண்ணிக் சொண்டேன்.

அம்மா, எப்படி இருக்கிறீர்கள்? நலமுடன் இருக்கவும். நாங்கள் இங்கு நலமுடன் உள்ளோம். உணவைப் பொறுத்த அளவில் எவ்வகைச் சிக்கலும் இல்லை. நாங்களே (பன்னிருவர் இணைந்து) சமைத்து உண்பதாகக் கேட்டு எங்களிடமே பொறுப்பை வாங்கிக் கொண்டுள்ளோம். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துள்ளனர்....

நீங்கள் அப்பா அவர்களிடம் இணக்கமாக எப்பொழுதும் பேசுங்கள். எது தாங்கள் கருதினும் அப்பாவிடம் அமைந்து சொல்லுங்கள். அப்பா அவர்களுக்கு இருக்கிற பணி அழுத்தத்திற்குத் தாங்கள் துணை நிற்பது என்பது இங்ஙனம் அமைந்து ‘பணியாற்றுவதே ஆகும். இன்றைக்குத் தென்மொழி அமைப்பின் அனைத்து முழுப் பொறுப்பையும், அச்சக, இதழ், வெளியீடு, அனுப்புதல், எழுதுதல், கூட்டங்களுக்குப் போதல் எனும் பணிகளையெல்லாம் அப்பா அவர்களே சுமந்துள்ளார்கள். அதற்குத் துணை நிற்க இன்றைக்கு எவரும் இல்லை. எல்லாரும் தங்கள் தங்கள் தந்நலங்களை நோக்கியே சென்று கொண்டுள்ளனர். எனவே, அப்பா அவர்களின் மனமொத்த நிலையில் தாங்கள் ஈடுபடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பிறை, நீ பணியை விட்டு நின்றுள்ளது நல்லதே. அமைதியாக வீட்டில் இரு. நன்றாக உடலைக் கவனித்துக் கொள். ஏன் இளைத்திருக்கிறாய்? நன்றாகச் சாப்பிடவும். ஓய்வு நேரத்தில் நிறைய படிக்கவும். தென்மொழித் தொகுப்புகளையெல்லாம் முழுமையாய்ப் படித்து விடு. அதுவே நமக்கு மிகச் சிறந்த வாளாகவும் கேடயமாகவும் இருக்கும். அம்மா, அப்பா அவர்களின் உடல்நலன்களைப் பேணு. அப்பா அவர்களுக்குச் சுவையாக உணவு சமைத்துக் கொடுக்கவும். எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். நாங்கள் மகிழ்வுடன் உள்ளோம். எங்களைப் பற்றி எந்தக் கவலையும் கொள்ள வேண்டாம். செந்து மடல் போட்ட பின் எழுதவும்.

செம்மல்!

எப்படி இருக்கிறாய்? மடல் எழுதலாம் அல்லவா? ஓய்வு நேரங்களில் அச்சகம் போவது மகிழ்ச்சி. ஒவ்வொரு நாளும் மாலையில் அச்சகம் போய் விட்டுக் கூட நீ வரலாம். இவ்வுலகியலில் நாம் அறிந்து கொள்ள வேண்டியன ஏராளமாக

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

தீர்ப்பின்படி தம் சொந்தப் பொறுப்பில் வெளி வந்திருக்க வேண்டும். ஆனால், கலைஞர் அரசு என்ன செய்தது? அவர்களின் விடுவிப்பு நாள் நெருங்கும் பொழுது, கடந்த 23-8-89-ஆம் பக்கல், மீண்டும் உதகை மண்டலக் குண்டுவெடிப்பு வழக்கில் அவர்களைக் குற்றவாளிகளாக்கி, பிடி ஆணை கொடுத்து, மீண்டும் சிறையுள் வைக்க, உதகை நடுவரின் கட்டளை பெற்று விட்டது. பின்னர், இருவரும் மீண்டும் மதுரைச் சிறை-யிலேயே வைக்கப் பெற்றனர்.

இந்த வழக்குகளில் காவல்துறை செய்துவரும் வியப்பு என்னவென்றால், இவர்களைப் பிடித்து ஓராண்டுக்கு மேலாகியும் இன்னும் இவர்களுக்குக் குற்ற அறிக்கை வழங்க முடியாததுதான்.

சென்னை, கத்திபாரா நேரு சிலைக் குண்டு வெடிப்பு, கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையக் குண்டு வெடிப்பு, உதகை மண்டலத்தில் குண்டு வெடிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் எல்லாருக்கும் தெரியும். ஆனால் அவை யாரால் நிகழ்த்தப் பெற்றன, எதற்காக நிகழ்த்தப் பெற்றன என்பதை யாரும் உறுதியாகச் சொல்ல முடியாது. இவற்றை ஒரு கருதுமுறையில் (அனுமானத்தின் பேரில்) தான், இத் தமிழக விடுதலைப் போராளிகள் நிகழ்த்தியிருக்கக் கூடும் என்று காவல்துறை இவர்களை அடித்து, மிரட்டிச் சிறையில் அடைத்து வைத்துள்ளது. ஆனால், இக் கருத்தை அவர்களால் குற்றச் சாட்டு ஆக்க முடியவில்லை. அதற்குப் போதுமான சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை. அவற்றைச் செய்த உண்மையான குற்றவாளிகள் யார் என்பது இன்னும் யாருக்கும் புலப்படவில்லை.

மேலும் இக் குற்றத்துக்காக என்று தெரியா-மலும், அதில் எந்தக் குற்றத்திற்கு யார் யார் பங்கு, எந்தெந்த அளவில் என்பனவெல்லாம் விளங்காமலேயே, பொத்தாம் பொதுவில் இவர்கள் மேல் குற்றஞ் செய்தார்கள் என்று உறுதிப்பாடு இல்லாமலேயே, இவர்களைச் சிறையில் அடைத்து வைத்திருந்தது மிகவும் தவறான நடைமுறை-யாகும். அதுவும் இவ்வாறு விளக்கமில்லாத, உயிர்ச்சேதமோ, சொத்துச் சேதமோ இல்லாத ஒரு நிலையில், இவர்களுள் அறுவர் தேசியப் பாது-காப்புக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவர்கள் என்று கருதி, இவர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்த் தளைப்படுத்தம் செய்து—அதுவும் இவர்கள் பிடிபட்ட இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின்—ஓராண்டு அடைத்து வைத்திருந்தது இன்னமும் தவறான நடைமுறையாகும். இனி, அதற்கு மேலும் இவ்வளவு காலம் சென்றும் கூட இன்னும் இவர்கள் மேல் எந்த வகையான குற்ற அறிக்கையும் கொடுக்காததும், தவறுக்கு மேல் தவறான தன் மூப்பதிகார வன்முறை நடவடிக்கை யாகும். கருப்புச் சட்டங்களைக் கையில் வைத்துக் கொண்டு, ஆட்சியாளர்கள் மக்களை என்னவும் செய்யலாம் என்னும் நிலை இன்னும் என்னென்ன கொடுமைகள் நிகழக் காரணமாக இருக்குமோ, நாம் அறியோம்.

பொழிலனும் முகிலனும் கடந்த 31-8-89 அன்று தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் பிடி தளர்ந்து, 1-9.79 அன்று மதுரைச் சிறையினின்று விடுதலை செய்யப் பெறுவார்கள் என்னும் எதிர்-பார்ப்பில் நாமும், குடும்பமும் மதுரை சிறைச் சாலைக்குச் சென்றிருந்து காத்திருந்து, ஏமாறிப் பின் வர வேண்டியிருந்தது. நம்மைப் போலவே அன்பர்கள் பலரும் வந்திருந்து ஏமாறித் திரும்-பினர்.

இனி, பொழிலன், முகிலன் ஆகியோரைப் போலவே, கோவைச் சிறையில் உள்ள பாண்டியன், சுப்பிரமணியன், நாராயணன் ஆகிய மூவரும், எந்த வகையிலும் இக் குற்றங்களுக்குத் தொடர்பில்லாத நிலையில் கடந்த ஓராண்டாக தே. பா. கா. சட்டப்-படி சிறை வைக்கப் பெற்றுள்ளதும் நாம் கருதிப் பார்க்க வேண்டியது.

'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்ற வகையிலும், 'தட்டிக் கேட்க ஆளில்லையானால் தம்பி சண்டைக்குக் குன்றேறி நிற்பான்'' என்ற நிலையிலும், காவல் துறையும் அரசும் நடந்து கொள்வது, பொதுத் தொண்டுக்கு முன் வரும் நம் இளைஞர்களைப் பெரிதும் அச்சுறுத்துவதாகும். பஞ்சாபிலும் அசாமிலும் நாள்தோறும் நடந்து வரும் வன்முறைகளுக்கு இவர்கள் மேல் உள்ள குற்றப் படுத்தம் ஆயிரத்தில் ஒரு பங்குதானும் இல்லை—என்பது அரசு உள்பட அனைவர்க்குமே விளங்குவதாகும். இருப்பினும் என்ன செய்வது? நாம் நேர்மையாகத்தானே போராட வேண்டி-யிருக்கிறது!

இவற்றுக்கெல்லாம் ஆட்சி அதிகாரக் காரர்கள் ஒரு நாள் விடை சொல்லியே ஆகல் வேண்டும். அதுவரை நாம் மிகப் பொறுமை யாகக் காத்திருப்போம். O

பிணையலில் வெளிக் கொணர ஏற்பாடு செய்யப் பெறுகிறது!

தமிழக விடுதலைப் போராளிகளை, மீண்டும் உதகைக் குண்டு வெடிப்புச் சட்டத்தில் தளைப்-படுத்தியுள்ளதை எதிர்த்து, அவர்களைப் பிணையலில் வெளிக் கொணர, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பெற்றுள்ளது.

கோவை வழக்கறிஞர் திரு. இரா. கசுத்தூரி அவர்களும், சென்னை வழக்கறிஞர்கள் திரு. சோதிப்பிரகாசம், திரு. வேணுகோபால் அவர்க-ளும் இச் சட்ட முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

உங்கள் மடல்கள்!

அறிவுரை, அறவுரை தேவை!

அன்பு ஐயா, வணக்கம். இதழ் எண் 125 நேற்றைய நடுப்பகற் பொழுதில் என் கைக்குக் கிட்டிற்று; மெத்தவும் மகிழ்ச்சியே.

இம் மண்ணில், நாம் அனைவரும் திறந்து பரந்த வெளிச் சிறையில் அடைபட்டுள்ளோம். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறைப் பிடிக்கப்பட்டு, மதுரையிலும், கோவையிலும் கம்பி-களுக்குள் அடைக்கப்பட்டுள்ளனர் தமிழ்ப் போராளிகள். தமிழ்ப் போராளிகள் (ஈழம் போராளியர்க்கும்) அனைவர்க்கும், தாங்களே தந்தை நிலையில் உள்ளீர்கள்.

தமிழ்ப் போராளியர்களை வரவேற்க வேண்டும் என்னும் ஆசை எனக்கும் உண்டு. என்ஞல் நேரில் வர இயலாது. எனக்கு உடல் நலம் இல்லை. உடல் நலம் பெற, இன்னும் இரண்டு திங்கள் ஆகலாம். என் சார்பாக, விடுதலை பெறவிருக்கின்ற போராளிகளுக்கு வாழைப்பழம் வாங்கிக் கொடுத்து வரவேற்புச் செய்தால் நல்லது; இத்துடன் உருபா இருபது பெறுமான அஞ்சல் ஆணையும் இணைத் துள்ளேன்.

சிறையிலிருந்து விடுதலையாகும் போராளி-யர்க்கு மேலும், மேலும் அறிவுரையும், அறவுரை-யும் சொல்லுமாறு தங்களை வேண்டிக் கொள் கின்றனன், பணிவுடனும் அன்புடனும் வணங்கு-கின்றனன்.

நா. அழகப்பத்தமிழன், சிவசைலம்.

(இதைத் தொடர்ந்து அவரெழுதிய இரண்-டாவது மடல்.)

ஆசிரியர்க்கு! வணக்கம், இதழ் எண்: 125 படித்தேன்; மகிழ்ந்தேன்,

இரண்டாம் பக்கத்தில் வாசகர் மடல்களைப் படித்தேன்; மடல்கள் அனைத்தும் அருமை. மயிலாடுதுறை வழக்குரைஞரின் மடலைப் படித்துப் பல உண்மைகளைப் புரிந்து கொண்டனன். பாவலர் தமிழ்க்கனலின் ஏக்கம் புரிகிறது. கலைஞரிடம் தமிழ் உணர்வை எதிர்பார்க்கக் கூடாது; எதிர்பார்ப்பவர்கள் அறியாமை மிக்க-வர்களே. தமிழ்நாட்டுப் போராளியர்க்கு ஒரு வேண்டுகோள்.

புதிய விடியலை நோக்கிப் புறப்பட்ட போராளி-யர்களே! நீவிர் வாழ்க!

நம் பாவலரேறு அவர்கள், எல்லோருக்கும் தந்தையாக உள்ளார்கள். அவர்களிடம், போராளி-கள் மேலும், மேலும், அறிவுரையும் அறவுரையும் கேட்டு நடக்கவும். அவர்கள் வழியில் பின செல்ல-வும்.

—அழகப்பத்தமிழன், சிவசைலம்.

மடல்களுக்கே அதிகமான பக்கங்களா?

அன்புகெழுமிய ஐயா, வணக்கம் பல. 'தென்-மொழி', தமிழ்ச்சிட்டு', 'தமிழ்நிலம்' ஆகிய இதழ்-களில் அதிகமான பக்கங்கள் மடல்களுக்காக ஒதுக்குவதாகவும், அதற்குப் பகரமாக வேறு செய்திகளோ, கட்டுரைகளோ இடம் பெறுவது சிறப்பாக அமையும் என்றும் அன்பர்கள் பலர் எண்ணுகின்றனர். மேலும் 'புதிய தமிழ்ச்சொற்-களுக்கு நேரான ஆங்கிலச் சொற்களைப் பிறைக்-குறியினுள் எழுதும்போது, சில பிழைகள் வருகின்-றன. இம் மூவிதழ்களைப் படிப்போர் கற்றோரே எனினும் வழுவின்றி எழுதுதல் (ஆங்கிலச் சொற்-கள்) சிறப்பாக அமையுன்றே! நன்கு-சிறப்பாக-அச்சிட வேண்டுகிறேன். அடியேனின் கருத்திற்-காகப் பொருத்தாள்க.

(எ-கா) (1) 'தமிழ்நிலம்' இதழ் எண் 121 ப. 2.

	தவறு	சரி
	eckoing	echoing
ப. 7.	Miraj	Mirage
	(Mirage-கானல் நீர்)	

(2) 'தமிழ்நிலம்' (இதழ் எண் தெரியவில்லை)

தவறு	சரி
Tashildar	Tahsildar

வினையமுத்தங்கள், தொல்லைகள் இவற்றிற்கிடையே சிக்கலாகத் தோன்றிடினும் என் கருத்தை ஏற்கு-மாறு பணிவுடன் வேண்டுகிறேன். அன்பன்.

—மா. இலக்குவன், புதுக்கோட்டை.

உண்மை எவ்வாறு உள்ளதோ?

பாவலரேறு-அய்யா பெருஞ்சித்திரனார் அவர்-கட்கு...,

அன்புசால் இளவல் தமிழ்க்கனல் வரையும் அன்பு முடங்கல்.,

தொலைக்காட்சித் தொடர், மற்றும் குமுகாய ஊடுருவல் கருவிகள் வாயிலாக, 'அம்மாமி' 'அத்திம்பேர்' அடிக்கும் கொட்டங்களையும், கும்மாளங்களையும், திட்டமிட்டுச் செய்துவரும் 'இன அழிப்பு' வேலைகளையும் பற்றியெல்லாம் சிந்திக்காது, 'செல்வி' போன்றோரின் முந்தானை-களைப் பிடித்துக் கொண்டும், 'முகமா'பூச்சில் மயங்கியும், புறத்தே பற்றி ஓடித் திரிந்து கொண்டும், 'தேசியம்' பேசிக் கொண்டு, உண்மைத் தேசியத்தின் பொருள் புரியாது, வடக்கத்தியானின் வாலாக ஆடிக் கொண்டுமே, இங்கு ஆட்டிக் கொண்டும் திரிகிற, நமது தமிழ்க் குமுகாயத் தினரை எண்ணிப் பார்த்தேன்! இன அழிப்புக்கும், மொழிக் கலப்பிற்கும் எதிராய், கொலைவாளினைத் தூக்க வேண்டிய கட்டாயம் என் கருத்தில் பட்டது!

வழக்கமான எச்சரிக்கை; மாற்றம் பெரு நடைமுறை!

-அதியமான்-

ஆண்டுதோறும் சூன் திங்கள் பிறக்கிறது. தொடக்கப் பள்ளிகளில் இருந்து கல்லூரிகள், தொழிற் கல்விக் கல்லூரிகள் வரை மாணவர் புதுச்சேர்க்கை நடைபெறுகின்றன. இப்பள்ளிகளில் நன்கொடைகள் என்ற பெயரால் கையூட்டுகள் ஒரு கணக்கற்ற வரைமுறையில்லாமல் வாங்கப் படுகிறது. புதிதாக வளர்ந்து வரும் ஆங்கிலப் பள்ளிகளில் சிறுவர்களை நாற்றுங்கால் (L. K. G. U. K. G.) பள்ளிகளில் அவர்களைச் சேர்க்க ஆயிரக்கணக்கில் நன்கொடை என்ற பெயரால் வாங்கப்படுகிறது. இப்பள்ளிகளை ஒழிக்கப் போவதாய் அமைச்சர்கள் பேசுகிறார்கள். ஆனால் ஆண்டுக்கு ஆண்டு இந்தி மொழி பயிற்றலோடு அவை புதிது புதிதாக முளைத்துச் செழிக்கின்றன. இங்கு வாங்கும் நன்கொடைப் பணத்திற்குப் பற்றுச் சீட்டுகள் கிடையாது. ஏனென்றால் அவை நன்கொடைப்போர்வை போர்த்தியகையூட்டு.

இது போன்றே தொழிற் கல்விகளில் மாணவர்களைச் சேர்க்க 10000 முதல் ஓர் இலக்கம் வரை நன்கொடை என்னும் பெயரால் கையூட்டுகள் வாங்கப் படுகின்றன. இத்தொகை பொருள்களின் விலை ஏற்றத்திற்குத் தக்கபடி ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டே போகும். பணம் படைத்தவர்கள் எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள் எனக் கேட்க மாட்டார்கள். கத்தை கத்தையாகப் பணத் தாள்களைக் கொடுக்கிறார்கள். கல்விச் சாலைகள் வணிகக் கடைகளாக மாறி விட்டன. கல்வி விற்கப் படுகிறது. விலை கொடுத்து வாங்கும் வகையுள்ளவர்கள் படிக்கும் பள்ளிகள் உயர்ந்த சாதிப் பள்ளிகள். ஏழைகள் படிக்க வைக்கும் பள்ளிச் சூத்திரப் பள்ளிகள். இந்தச் சூத்திரப் பள்ளிகள்தாம் அரசு நடத்தும், ஊராட்சி ஒன்றியங்கள், நகர் மன்றங்கள் நடத்தும் பள்ளிகள். இங்கேதான் ஏழ்மை நிலையில் உள்ள பிள்ளைகள் படிக்கின்றனர். ஏனென்றால் நன்கொடைப் பள்ளிகளில் நன்கொடை கொடுக்க இவர்களுக்கு இயலாத நிலை. இந்த ஏழைகள் இல்லையென்றால் பெரும்பாலான ஆசிரியர்களுக்குச் சோறு கிடைக்காது.

இந்த ஏழைகளின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் போதுமான இட வசதிகள் கிடையா. ஆசிரியர்களும் போதுமான அளவிற்கு இல்லை. ஆசிரியர்களும் இதைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அவர்கள் தங்களுக்குச் சம்பளம் வேண்டுமென்று மட்டும் அரசை வற்புறுத்துவார்கள். வேலை நிறுத்தம் செய்வார்கள். அவர்கள் வினவும் கோரிக்கைகளில் பள்ளியின் நிலை பற்றி ஒன்றுமே இருக்காது. இங்கு பயிலும் பிள்ளைகளின் பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை இப்பள்ளியில் படிக்கும்படி கடவுள் தலையெழுத்தைத் தெளிவாக எழுதி விட்டான் என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். இந்த வகையான பள்ளிகளில் பயிலும் ஆசிரியர்களுடைய பிள்ளைகளையும்கூட நன்கொடைப் பள்ளிகளில்தான் படிக்க வைக்கிறார்கள், அதுவும் அவர்களுடைய தலை'விதி' என எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

(முன் பக்கம் தொடர்ச்சி)

இத்தமிழினம் காலங்காலமாய்க் காத்தும், பின்வரும் தலைமுறைகட்கு ஊட்டியும் வைக்க வேண்டிய, தாய்மைச் செய்திகளாக 'நேருரைகள்' அமைந்து இருந்தன!

தற்செயலாய் 'கல்கி' இதழ் ஒன்றைப் புரட்டினேன்! 5-2-89-ஆம் நாள் இதழது! சங்கராச்சாரி மிகவும் உரிமையாய், அருள்வாக்கில், தமிழ்க் கொலை புரிந்திருந்தார்! மிகவும் இலகுவாக-'வஸதி' களையும், 'தேஹாரோக்கியங்களையும், 'ஜல'த்தையும், வம்படியாகப் புகுத்தி எழுதி, எமது அமுதத் தமிழ்மொழியை சிதைத்து இருந்தார்! அம்மட்டோ!! அதனைக் கட்டங் கட்டிப் போட்டு, "இப்படித்தான் நாங்கள் நம் தமிழ்மொழியை சிதைத்துப் பின்னர், ஒரு கலவை மொழியை உருவாக்கி, அதனை இறந்து போன 'சமற்கிருதத்திற்கான, எழுத்து வடிவத்திற்கு எடுத்துக் கொள்ளப் போகிறோம்.'' எனவும் எச்சரித்து இருந்தனர் கல்கி கூட்டத்தினர்.

குருதி கொதித்தது! "இந்த நொள்ளைக் கண் படைத்த தமிழ்க் குமுகாயத்திற்குத் 'தனது மொழி' 'தனது இனம்' என்ற பற்றில்லையே! எமது மொழியில், இவ்வாறு கலப்படம் செய்து எழுதும் கயவனின் கைகளை வெட்டிச் சாய்ப்பேன்"—எனத் துடித்து எழவில்லையே! இதனைக் கண்டுங்காணாதும், கருத்துக் குருடர்களாயும், செவிட்டுப் பிறவிகளாயும் வாழும் நந்தமிழ் மக்களை எண்ணி எண்ணி, வருத்தம் சூழ்ந்தது! 'தமிழ்நிலம்' இதழ் எண் 117-இல் தம்பி பொழிலனைப் பற்றிய செய்திகள் காணாது வருந்தினேன்! இதழ் எண் 118 வாயிலாக, 'மாவீரனை'ச் சந்தித்துத் திரும்பிய, பாபு-மாசிலாமணி மடலால் அமைவுற்றேன்!! ஒப்போலையைக் கலைஞர்க்கு வழங்கும்படி விடுத்த வேண்டுகோளை ஏற்று, நம்மின மக்கள், கலைஞரையே தேர்வு செய்தனர்! கலைஞரின் தேர்வும், தமிழ்க்குடிமகனுரின் அரசியல் நுழைவும், தம்பி பொழிலனின் தொல்லைகளைக் குறைக்கவும், வேகமாய் விடுதலை பெறவும் உதவுமெனக் கருதுகின்றேன்! உண்மை எவ்வாறு உள்ளதோ! O

—பாவலர். தமிழ்க்கனல், தஞ்சை.

இந்தி வல்லாண்மை ஆட்சி அதிகாரமும் பிறமொழி நாட்டின மக்களின் விடுதலைப் போராட்டமும்!

இந்தியாவில் அனைத்திந்தியக் கட்சிகளான இந்திரா பேராயம் (இந்திரா காங்கிரசு), சனதா-லோக்தளம், பாரதீய சனதா, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிசம்) போன்ற மற்றைய அனைத்திந்தியக் கட்சிகளும், இந்திமொழி ஆளும் பிரிவு (வர்க்க)க் கட்சிகளே. பிற அனைத்து மொழி நாட்டின வல்லரசியச் சார்பு முதலாளிகளும் இக்கட்சிகளில் இடம் பெற்றாலும், அவர்கள் இந்தி மொழியையும் இந்திய மொழி நாட்டின் ஆளும் பிரிவையும், இந்திய நாட்டின மக்களையும் சார்ந்து நிற்பதன் மூலமே, இந்தி மொழி நாட்டினம் உள்பட அனைத்து மொழி நாட்டினத்தையும் சுரண்டுகிறது. ஆகையால் இந்தியைத் தவிர்த்த பிறமொழி நாட்டின ஆளும் பிரிவாக இவர்களைக் கருத வேண்டாம்.

தமிழ்நாட்டில் இருக்கும் அ.தி.மு.க, தி.மு.க., ஆந்திராவில் தெலுங்கு தேசம், காசுமீரில் தேசிய மாநாட்டுக் கட்சி, பஞ்சாபில் அகாலிதளம், அசாமில் கனபரிட்சத், மிசோரமில் மிசோ தேசிய முன்னணி போன்ற பிற மாநிலக் கட்சிகளும், அந்தந்த மொழி நாட்டின வல்லரசியச் சார்பு முதலாளியத்தை வெளிப்படுத்தும் கட்சிகளே. இக்கட்சிகள் தம் தம் மொழி நாட்டின ஆளும் பிரிவின் நலனைப் பெற விரும்புகின்றன. இந்தி மொழி நாட்டின ஆளும் பிரிவால் உருவாக்கப் பெற்ற அரசியல் அமைப்புக்கும், அரசியல் சட்டத்திற்கும் உட்பட்டே **மாநிலத் தன்னாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்** போன்ற முழக்கங்களையே முன் வைக்கின்றன. இந்தி ஆளும் பிரிவின் அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்டே, அந்தந்த மொழி நாட்டின மக்களை ஆட்சி செய்யவே விரும்புகின்றன. அவ்வாறானால் இக்கட்சிகள் இந்தி ஆளும் பிரிவின் அடிவருடிகளாகவும், அந்தந்த மொழி நாட்டின விடுதலைக்கு இரண்டகர்களாகவும்தாம் செயல்படுவனவாக இருக்கும். அதே சமயத்தில், அந்தந்த மொழி நாட்டின மக்களை அதே மொழி நாட்டினத்தைச் சேர்ந்தவர்களே ஆட்சி செய்கிறார்கள் என்று பொய்த் தோற்றத்தை உருவாக்கும்.

எடுத்துக்காட்டாக தி. மு. க., அ. தி. மு. க. போன்ற கட்சிகள் தமிழ்நாட்டின் வல்லரசியச் சார்பு முதலாளியக் கட்சிகளே! இக் கட்சிகள் தம் ஆளும் பிரிவு நலனை, இந்தி ஆளும் பிரிவின் அரசியல் ஆளுமைக்கு உட்பட்டுப் பெறவே செயல்படுகின்றன. இந்திய ஆளும் பிரிவின் அடிவருடிகளாக இருந்துதான் தங்கள் நலனைப் பெற விரும்புகின்றன. இந்தி ஆளும் பிரிவும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தி.மு.க., அ.தி.மு.க. போன்ற தமிழ்நாட்டின் ஆளும் பிரிவுகளை வைத்துத்தான், ஆட்சி செய்ய முடிகிறது. ஆகையால் தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு இந்தி(ய) ஆளும் பிரிவின் அரசியல் அமைப்பிற்கு உட்பட்டுச் செயல்படும் அனைத்துத் தமிழ்நாட்டின் ஆளும் பிரிவுக் கட்சிகளும் மற்றைய கட்சிகளும் எதிரிகளே!

அதே வேளையில் தமிழ்நாட்டின வல்லரசியச் சார்பு முதலாளியக் கட்சிகள், குறிப்பாக இந்தியாவை ஆளும் உருசிய வல்லரசியத்திற்கு ஆதரவான வல்லரசியச் சார்பு முதலாளிய ஆட்சியை எதிர்த்துத் தமிழ்நாட்டில் உள்ள அமெரிக்க வல்லரசியத்திற்கு ஆதரவான வல்லரசியச் சார்பு முதலாளியக் கட்சிகள் தமிழ்நாட்டைத் தங்கள் நலனுக்காகவும், தங்கள் ஆண்டைகளின் நலனுக்காகவும் தனி நாடாகப் பிரிக்க, தமிழ்நாடு விடுதலைக்குக் கருவி ஏந்திப் போராடினால் அவர்களுள் **ஒன்றிய முன்னணி** அமைத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கூட்டணி தமிழ்நாடு விடுதலை பெறும் வரை நீடிக்கவும் வேண்டும். அதன் பிறகு தமிழ்நாட்டின் ஆளும் பிரிவை வீழ்த்துவது நமது உடனடிக் கடமையாகும்.

தொழிலாளர் பிரிவுத் தலைமையில் தமிழ்நாட்டின் மக்களுக்கும் ஆளும் பிரிவினர்க்கும் உள்ள முரண்பாடு முதன்மை முரண்பாடாக மாறும் இச் சமயத்தில், தமிழ்நாட்டு மக்களுக்குத் தொழிலாளர் பிரிவு தலைமை தாங்க, தமிழ்நாட்டின் ஆளும் பிரிவை (வர்க்கத்தை) வீழ்த்திப் புதிய குடிநாயகக் குமுகாயத்தைப் படைக்க வேண்டும்.

இந்தியாவில் இந்தி நாட்டின மக்கள் 35 விழுக்காட்டுப் பேர் இருக்கிறார்கள். இம் மக்களின் படிநிகராளிகள் போலவும் இவர்களின் நலனைக் காப்பது போலவும் இந்திய நாட்டின் ஆளும் பிரிவு நாடகமாடுகிறது. உண்மையில் இந்தி நாட்டின மக்களைச் சுரண்டியும் அவர்களின் குமுகாய மாற்றத்திற்குத் தடையாகவும் இந்தி ஆளும் பிரிவு இருக்கிறது. இந்திய நாட்டை முழுவதும் சுரண்டிக் கொழுக்க, இந்திய நாட்டின ஆளும் பிரிவு, இந்தி நாட்டின மக்களுக்கு இந்தி இன வெறியைத் தூண்டித் தனது நலனைப் பாதுகாத்துக் கொள்கிறது. இருக்கின்ற பாராளுமன்றத்தில் 225 பேர்கள் இந்தி மொழி பேசும் மக்களின் படிநிகராளிகள். மேலும் இந்திய ஆட்சிக்கு உட்பட்ட அனைத்துப் பகுதியையும் சுரண்டும் நோக்கத்தோடு, அனைத்து இந்தியக் கட்சியை, ஆதரிக்கும் பிறமொழி நாட்டின ஆளும் பிரிவும் இந்தி ஆளும் பிரிவின் படிநிகராளிகளே (பிரதிநிதிகளே!).

இந்த இந்தி ஆளும் பிரிவின் படிநிகராளிகள்... தாம் இந்தியாவின் முழுப்பகுதியின் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் இயக்க ஆற்றலாக (சக்தியாக)—அஃதாவது தலைமையாற்றலாக விளங்குகிறார்கள். பிற மாநில - பிறமொழி இன - ஆளும் பிரிவுகள் துணை ஆற்றல்களாகத்தாம் இருக்கின்றன.

குறிப்பாக, தமிழ்நாட்டைத் தமிழ்நாட்டின ஆளும் பிரிவான வல்லரசியச் சார்பு முதலாளிகள் ஆட்சி செய்தாலும், இந்தி ஆளும் பிரிவின் படிநிகராளியாக நடுவில் ஆட்சி செய்யும் (பாராளுமன்ற) இந்தி ஆளும் பிரிவுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தீர்மானம் செய்யும் தலைமை ஆற்றலாக விளங்குகிறது.

படைத்துறை, அறமன்றத்துறை, பொருளியல் துறை, தொழில் துறை, கல்வித் துறை, வெளிநாட்டு உறவு, வானூர்திப் போக்குவரத்து, அஞ்சல், தொலைவரி, வைப்பகங்கள், வாழ்நாள்காப்பீடு, வணிக வரிகள், வருவாய்த் துறை, காவல்துறை போன்ற அனைத்து ஆளுமைகளிலும் இந்தி ஆளும் பிரிவுதான் ஆட்சி செலுத்துகிறது இந்தி ஆளும் பிரிவு நடத்தும் (நடுவண் அரசு) இந்திய ஆட்சித் துறை (I.A.S) இந்தியக் காவல்துறை (I.P.S.), இந்திய வெளிநாட்டுத்துறை(I.F.S) போன்றவற்றிலும், தேர்வுகள் மூலம் இந்தி ஆளும் பிரிவுதான் ஆளுமைக்கு உட்பட்ட அதிகாரிகளை அமர்த்துகிறது. ஆளுநர்கள் அமர்த்தம், உயர்நெறி மன்ற நடுவர்கள் அமர்த்தம், போனற அனைத்தையும் இந்தி ஆளும் பிரிவு தன் கையில் வைத்துக் கொண்டு, இந்தி மொழி நாட்டினத்தின் குமுகாய வளர்ச்சி, உட்பட இந்தியாவில் அனைத்துப் பிறமொழி நாட்டினங்களின் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கிறது.

எனவே, இந்தி ஆளும் பிரிவின் நலனை எதிர்த்தும், இவர்களுக்குச் சார்பாக இயங்கும், அந்தந்த மாநில மொழி நாட்டின ஆளும் பிரிவுகளை எதிர்த்தும், ஆங்காங்குள்ள விடுதலை இயக்கங்கள்போராட்டம்நடத்திவருகின்றன. நாகாலாந்து மணிப்பூர், மிசோ, காசுமீர், அசாம் காலிசுத்தான, ஆந்திரா, கூர்க்காலாந்து, தமிழ்நாடு—போன்ற மொழி நாட்டினங்கள் மொழி, நாடு (தனி நாடு) விடுதலை கேட்டுப் போராடி வருகின்றன. இதற்குக் காரணம் என்னவெனில் ஒவ்வொரு மொழி நாட்டினக் குமுகாய வளர்ச்சிக்கு அந்த அந்த மொழி நாட்டினத்தைச் சேர்ந்த ஆளும் பிரிவும் தடையாக இருக்கிறது. அதனால்தான் மொழி, நாடு விடுதலை (தனி நாடு) இயக்கங்கள் தோன்றவும் வெற்றி பெறவும் கீழ்க்காணும் முரண்பாடுகள் அடிப்படையாக இருக்கின்றன.

1. தலைமையில் உள்ள இந்தி வல்லரசியச் சார்பு முதலாளியத்திற்கு அனைத்து மொழி நாட்டின் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு.

2. அந்தந்த மொழி நாட்டின நிலச்செல்வர்களுக்கும் அனைத்து மக்களுக்கும் இடையேயான முரண்பாடு.

3. வல்லரசியத்திற்கும் இந்திய வல்லாளுமைச் சார்பு முதலாளிய நாட்டு மக்களுக்கும் இடையிலான முரண்பாடு.

4. வல்லரசியங்களுக்கு இடையிலான முரண்பாடு.

5. அமெரிக்க வல்லாண்மை, வல்லாளுமைச் சார்பு முதலாளிய நாடுகளுக்கும், உருசிய வல்லாண்மை, வல்லாண்மைச் சார்பு முதலாளிய நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடு.

இந்தியாவில் ஆட்சி செய்யும் இராசீவ் ஆட்சி உருசிய வல்லாண்மையைச் சார்ந்து நிற்கிறது.

⁘ ⁘ ⁘

ஆகவே, தமிழ்நாடு விடுதலைக்கு இந்தி வல்லாண்மைச் சார்பு முதலாளிகள், தமிழ் வல்லாண்மைச் சார்பு முதலாளிகள், தமிழ்நாட்டின் நிலச்செல்வர்கள், உருசிய, அமெரிக்க வல்லரசியங்கள் அனைவரும்! எதிரிகளே!...பொது எதிரியான ஆளும் பிரிவை முதலில் வீழ்த்துவதும், பிறகு தமிழ் மக்களின் எதிரியான தமிழ் ஆளும் வர்க்கத்தைப் பின்பு வீழ்த்துவதும் இன்றியமையாதது. O

அறிக்கை—தமிழ்நாடு பொதுவுடைமைக் கழகம்.
(மார்க்சிய - இலெனினிய - மாவோயியக்கருத்தாளர்)

தலைமைகள், கட்சிகளைவிட இனம்...!

திராவிட இயக்க வரலாற்றுத் தேவை முடியும் தறுவாயில் உள்ளது. தமிழின, தேசிய விடுதலைப் போராட்ட வரலாறு வளர்ந்து வரும் காலம் இது!

எனவே, 'திராவிடம்', 'இந்தியம்' என்ற கருதுகோள்கள் சர்ய்கால் இழந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் 'பெயர்ப் பெருமைகள்' 'பாலாறு', என்ற பெயர்ப் பொருத்தம் உடையன! இவற்றினூடே தமிழின-தேசிய உணர்வுகள் பொங்கி வழிகின்றன-அல்லது ஊறி வருகின்றன எனலாம்!

ஆகவேதான், பாவலரேறு அவர்கள் இயக்கங்களின் 'தலைமைகள்', 'கட்சிகள்' பற்றிப் பேசுவதை விட நம் இனவுணர்வுக் கடமைகளை வலியுறுத்தி வருகின்றார்கள் எனக் கருதுகின்றேன்!

'திராவிட இயக்கத்தின் இன்றைய பொருத்தப்பாடு' குறித்த பெ. மணியரசனின் 'பார்வை'க்கான காரணமும் இதுவே ஆகலாம்! அறிஞர் குணாவும், இவர்க்கும் முன்பே இத்துறையில் ஆழமான ஆய்வுரைகளை மேற்கொண்டிருப்பதும் இதன் பொருட்டே எனலாம்!;

—பறம்பை அறிவன்—

Scanned with CamScanner

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய நன்கொடைப் பள்ளிகளில் கொள்ளைகள், பட்டப் பகலில் அனைவருக்கும் தெரியும்படி நடக்கின்றன. இவர்களை யாரும் தண்டிக்க இயலாது. தெரிந்து கொள்ளையடித்தால் அது சட்டப்படி குற்றம் இல்லை போலும். தெரியாமல் கொள்ளையடித்தால்தான், சட்டம் இவர்கள்மீது பாயும். எனவே நன்கொடையின் பெயரால் கொள்ளையடிக்க பலர் ஆங்கிலப் பள்ளிகள் என்றும் தொழிற் பள்ளிகள் என்றும் தொடங்கி நன்கொடைத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்றனர். இப்பள்ளி ஆளுநர்களை (நிர்வாகிகளை)க் கேட்டால், "இப்பள்ளிக்கு ஏற்பாணைகளைப் பெறுவதற்கு நாங்கள் சார உணவிற்காக இலக்கக் கணக்கில் நன்கொடை என்ற பெயரால் அரசுக்கு வழங்கி , இருக்கிறோம். எனவே அதனாலேயே நாங்களும் நன்கொடை வாங்குகிறோம்." என்றும் கூறுகிறார்கள்.

இதுவும் உண்மையென்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால் எந்த அமைச்சரவையாக இருந்தாலும் சூன் திங்கள் பிறந்தவுடன் அமைச்சர்கள் "மாணவர்களின் சேர்க்கைக்கு நன்கொடை பெற்றால் ஏற்பாணைகளைத் திரும்பப் பெறுவோம்" என்று கூறுகிறார்களே தவிர அப்படி நடைபெறவில்லை. ஏனென்றால் இந்த நன்கொடைப் பள்ளிகளில் நன்கொடை என்ற பெயரால் கையூட்டு வாங்காமல் இல்லை. பள்ளிகளும் ஆண்டுகளுக்கு ஆண்டு கூடிக் கொண்டே போகிறது. அமைச்சர்களின் எச்சரிக்கைக் குரல் ஒலித்த பின்னரேதான் தொகையும் கூடி இருக்கிறது. என்றாலும் ஏற்பாணைகள் திரும்பப் பெறவில்லை. ஆகவே நன்கொடைகளைப் பற்றி அமைச்சர்கள் எதுவும் பேசாமல் இருந்தால் நல்லது. தொகையாவது கூடாமலிருக்கும்.

"நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன். நீ அழுவது மாதிரி அழு" எனக் கூற வேண்டாம். கையூட்டுகள், நன்கொடை, நலக்கொடை, கட்டிடக் கொடை, தளவாடப் பொருட்கள் கொடை போன்ற புதுப் பெயர்களால் வளர்ந்து வருகின்றன. செழித்துக் குலுங்குகின்றன. அமைச்சர்கள் கூறும் எச்சரிக்கை வழக்கமான பேச்சும் அதை மதிக்காமல் வாங்கும் நன்கொடைக் கையூட்டும் வழக்கமான நடைமுறைப் பழக்கங்களாகி விட்டன. அமைச்சர்களின் நன்கொடைத் தடுப்பு எச்சரிக்கை தேவையற்ற வீண்பேச்சு. வாழ்க நன்கொடைப் பள்ளிகள்! வீழ்க அமைச்சர்களின் எச்சரிக்கை! O

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

இன நலமே காப்பு!

மனமழிந்து போனால் நல்லது. ஆயினும் அஃதின்றி மாந்தநேயம் வளர்வதில்லையே... மனநலம் நன்கமைய வேண்டும். இன நலமே பெருங்காப்பாகும் என்றெல்லாம் வள்ளுவம் தெளிந்த சான்றோர் கூறக் கேட்டிருக்கிறோம். என்றாலும் 'இனநலம் பேணுந் தமிழறிஞரைப் பேணுவதில் தமிழர் பின்தங்கியே உள்ளனர்'

'மேலவையில் தமிழறிஞர் 'பாவலரேறு' இடம் பெறக் கலைஞர்க்கு வேண்டுகை விடுத்தல் வேண்டும்' என்று குறிஞ்சிச் செல்வன் கூறினார். 'கலைஞர் இனநலம் பேணுபவர் எனில் இதனைச் செய்தாதல் வேண்டும்' என்றார் அருகிலிருந்த 'கதிரவன்' என்ற அன்பர்!

தந்தை பெரியார் பற்றிப் பெரியவர் மா. சு. இராமசாமி கூறியது நினைவில் வருகிறது. "எத்தனை ஆயிரம் சிக்கல்கள் என்றாலும், உறங்கும் வேளையில் அமைதியாகப் பெரியார் எப்படித்தான் உறங்குகிறாரோ? ஒரு சிறிய சிக்கல் வந்தாலும் அதைப் பற்றியே எண்ணி உழன்று கொண்டிருக்கிறோமே" என்று அவர் கூறினார்.

ஒரு வினையை ஆழமாக எண்ணி, எதிர்விளைவு எதுவரினும் சந்திக்கும் துணிவுடையவர் 'தூங்குங்கால் தூங்கவும், விழிப்பாயிருக்குங்கால் விழிப்பாயிருந்து செயல்படவுஞ் செய்வர்' என்பது உண்மை தானே!

—பறம்பை அறிவன்.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளன. அதற்கு அம்மூப்பாவிடம் நீ இன்றைக்கு உடன் இருந்து அறிந்து கொள்ளக் கிடைத்துள்ள காலம் அரும்பெறற்கரியது. அஃது உன் வாழ்வில் பொற்காலமானது, எனவே, அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள். எதைச் செய்யும் முன்னும் ஒரிருமுறை அம்மூப்பாவிடம் கேட்டுத் தெளிவாகிக் கொள். அது நம் அறிவு வளர்ச்சிக்குத் தானேயன்றி வேறில்லை.

அன்புடன்,

பொழிலன்,

இழப்பு ஒருபுறம்! எக்காளம் ஒருபுறம்!

O செயற்கைக் கோள் விடுவதில் ஏற்பட்ட கோளாறினால் அரசுக்கு மொத்தம் 16 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அலுவலர், ஆசிரியர், ஊதிய உயர்வுக்காகக் கூடுதலாக 10 கோடி உருபா அதிகரிப்பதைப் பற்றிப் பெரிது படுத்திப் பேசுகிறது, அரசு!

உருசியாவில் மொழிச் சிக்கல்கள்!

மிகவும் அதிகமான தேசிய இனங்கள் உள்ள நாடுகளில் சோவியத்து ஒன்றியம் என்று அழைக்கப் பெறும் உருசியாவும் ஒன்று. நூற்றுக்கும் அதிகமான மொழிகள் பேசும் தேசிய இனங்கள் அங்கு உள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மொழிகள் மட்டுமின்றித் தேசிய மரபுகளும், நடையுடை பண்பாடுகளும் வெவ்வேருக உள்ளன.

சார் அரசு வீழ்த்தப்பட்ட பிறகு, பல்வேறு மொழி பேசுபவர்களின், மற்றும் வாழ்க்கை முறை கொண்டவர்களின் ஒன்றியமாக சோவியத்து ஒன்றியம் மலர்ந்தது. இங்கு வழங்கும் மொழிகளில் சில உருசிய மொழி போல் உலகப் புகழ் பெற்ற இலக்கியங்களைக் கொண்டிருந்தன. ஆர்மீனிய மொழியைப் போலும் சில மொழிகள் நீண்ட பரம்பரைகளைக் கொண்டிருந்தன. ஆனால் பெரும்பான்மையான இன மக்கள் எழுத்தறிவின்றி இருந்தனர். பல சிறு தேசிய இன மொழிகள் எழுத்து வடிவமே இல்லாமல் பேச்சு வழக்கில் மட்டுமே இருந்தன.

'பல தேசிய இனங்களைக் கொண்ட நிகருடைமை நாட்டில் மக்களின் தாய்மொழிகள், தொடர்ந்து மிக முகாமையான பங்கு ஆற்றி வரும்' என்று இலெனின் கூறினர். 'பெரும்பான்மையோர் மொழி'யை மக்கள் கற்க வேண்டிய தேவையையும் அவர் வற்புறுத்துகிருர். 'ஒரே நாட்டில் வாழும் பல்வேறு தேசிய இனங்களும் (அவர்கள் ஒன்று சேர்ந்து வாழ விரும்பும் வரை) பொருளியல் பரிமாற்றத்தின் தேவைகளுக்காக அவர்கள், பெரும்பான்மையினரின் மொழியைக் கற்க வேண்டிய இன்றியமையாமை இருக்கும்'' என்று அவர் கூறுகிருர்.

சோவியத்து ஒன்றியத்தில் பெரும்பான்மை மக்களின் மொழி, உருசிய மொழியாகும். இதனல் தான் தேசிய இனங்கள் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றத்திற்கு இந்த மொழியைத் தேர்ந்தெடுத்தன. 1970-ஆம் ஆண்டில் சோவியத்து ஒன்றியத்தில் உருசியரல்லாத மக்கள் தொகையில் 5.48 கோடிப் பேர் (49 விழுக்காட்டினர்) உருசிய மொழியை நன்ருகக் கற்றிருந்தனர். 1979-இல் அவர்கள் தொகை 7.74 கோடியாக (62 விழுக்காட்டினர்) உயர்ந்தது; 1982-இல் அது 83 விழுக்காடு ஆயிற்று.

முகாமையான ஆறு உலக மொழிகளில் உருசிய மொழி ஒன்று. (மற்றவை ஆங்கிலம், சீனம், இசுப்பானிசு, பிரெஞ்சு, மற்றும் அரபிக் மொழிகள்.) சோவியத்து ஒன்றியத்தில் பேசப்படும் மற்ற எல்லா மொழிகள் மீதும் இ'து ஆளுமை செலுத்துகிறது. மற்ற மொழிகளும் உருசிய மொழி மீது சாய்கால் செலுத்துகின்றன. இதனல் பலுக்கல், சொல்லாக்கம், சொல்லிய அமைப்பு, எல்லாவற்றிற்கும் மேலாகச் சொல்வளம் ஆகியவற்றின் மீது தாக்கம் ஏற்படுகிறது. குறிப்பாக, புதிதாக வரிவடிவ எழுத்துகளைப் பெற்றுள்ள மொழிகளில் உருசிய மொழியின் தாக்கத்தைக் காணலாம். சோவியத்து ஆட்சிக் காலத்தில்தான் ஏறத்தாழ 50 தேசிய இன மொழிகள் வரி வடிவ எழுத்துகளைப் பெற்றன என்பது குறிப்பிடத் தக்கது.

உருசிய மொழி பரவுவதால், சோவியத்து ஒன்றியத்தில் உள்ள மற்ற தேசிய இன மொழிகளின் வளர்ச்சிக்கு இடையூறு இல்லை என்று சொல்லப் பெறுகிறது. மாருக, அவற்றின் வளர்ச்சிக்கு இ'து உதவும் என்றும் சொல்லப் பெறுகிறது. இத்தகைப் பரிமாற்றத்தினல் தேசிய இன மொழிகளின் தனித் தன்மை தாக்கப் படுவதில்லை என்பதை பெரும்பாலும் எல்லா அறிஞர்களும் ஒப்புக் கொள்வதாக அரசு கூறுகிறது.

இருப்பினும், இங்கு, இருமொழிக் கொள்கை மூலம் எல்லா மக்களும் உருசியத் தன்மையுடையவர்களாக ஆக்கப் படுவதாகவும், மற்ற மொழிகளின் மீது உருசிய மொழி ஆளுமை செலுத்துவதாகவும், இறுதியில் தேசிய இனங்கள் ஒழிக்கப்படுவதாகவும் வெளிநாடுகளில் பரவலாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

உருசியாவில் உள்ள ஒவ்வொருவரும் உருசிய மொழி கற்க உருசிய அரசு வாய்ப்பு அளிக்கிறது. உருசிய மக்கள் கணிசமான அளவு வாழும் பகுதிகளில் உருசிய மொழிப் பள்ளிகளும், அந்தந்த வட்டார தேசிய மொழிப் பள்ளிகளும் நடைபெறுகின்றன. எடுத்துக் காட்டாக, உசுபெக் போன்ற வட்டார மொழிகளில் பாடங்கள் கற்பிக்கப்படும் பகுதிகளில் உருசிய மொழி இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. உசுபெக்கித்தானில் உள்ள உருசிய மொழிப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் உசுபெக் மொழியையும் கற்கின்றனர். தங்கள் குழந்தைகள் எந்தப் பள்ளிகளில் படிக்க வேண்டும் என்பதைப் பெற்ருேர்களே உறுதிப் படுத்துகின்றனர்.

உருசியப் பண்பாட்டொழுக்கச் செல்வங்களைச் சோவியத்துத் தேசிய இன மக்கள் அறிந்து கொள்ள உருசிய மொழி வாய்ப்பு அளிப்பதால் இது மிகவும் இன்றியமையாதது என்று கருதப் படுகிறது. உருசிய மொழி புசுக்கின், டால்சுடாய், செக்கோவ், டாசுடாயெவ்சுக்கி, கோர்க்கி, இலெனின் முதலியவர்களின் மொழியாகும். உல-

கத்தின் மற்ற தேசியக் கலைப்பண்பாடுகளைப் புரிந்து கொள்வதற்கும் உருசிய மொழி பயன்படுகிறது என்று கூறப் படுகிறது. மக்கள் குழுகாயம் திரட்டியுள்ள செய்திகளில் ஐந்தில் நான்கு பங்கு உருசிய மொழியில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. அங்குள்ள பல்வேறு தேசியஇனங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எழுதும் இலக்கியங்களும் உருசிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு ஏராளமான படிகள் வெளியிடப்படுகின்றன. இவ்வகையில் அவை சோவியத்து ஒன்றியம் முழுவதிலும் பரவுகின்றன. இவை மேலும், உருசிய மொழியிலிருந்து மற்ற உலக மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப் படுவதால், அவை உலக வாசகர்களுக்கும் அறிமுகப் படுத்தப் படுகின்றன.

மிகச் சிறிய தேசிய இனங்களின் மொழிகளில் கூடப் பள்ளிக்கூடங்கள் தனிக் கவனம் செலுத்துகின்றன. சோவியத்துப் பள்ளிகளில் 55 மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. அத்தனை மொழிகளிலும் பாடப் பொத்தகங்கள் அச்சிடப் படுகின்றன. ஒரு சிறிய தேசிய இன மக்களின் மொழியில் ஒரு பாடப் பொத்தகத்தில் 1000 படிகள் அச்சிடுவதற்கு ஆகும் செலவு, பல வண்ணப்படங்களுடன் கூடிய படத்தொகுப்பு அச்சிடுவதற்கு ஆகும் செலவுக்குச் சமமாக ஆகிறது. எனினும் இந்தப் பொத்தகங்கள் குழந்தைகளுக்கு இலவயமாக வழங்கப்படுகின்றன.

சோவியத்து அடிப்படைச் சட்டம் மக்கள் தங்கள் தாய்மொழிகளை வளர்க்கவும், குழந்தைகளைத் தங்கள் மொழிகளிலே கல்வி கற்பிக்கவும் உறுதி தருகிறது. ஆனால் பிற மொழிகளைப் பயன் படுத்தத் தடையில்லை. சோவியத்து ஒன்றியத்தில் அறமன்றங்களில் குடியரசு மொழியிலோ அல்லது அந்த வட்டார மொழியிலோ, பெரும்பான்மையாக வாழும் மக்களின் மொழியிலோ தான் சட்ட நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. ஒருவர் சட்ட நடவடிக்கைகள் நடைபெறும் மொழியைப் பேசத் தெரியாதிருந்தால் அவருக்கு உதவ மொழி பெயர்ப்பாளர்கள் அளிக்கப் பெறுகின்றனர். குடியரசுகள் தங்கள் மொழிகளில் சட்டங்களை இயற்றுகிறார்கள். சோவியத்து ஒன்றியத்தில் குடியரசுகள் தங்கள் சொந்தக் குற்றவியல் சட்டங்களைக் கொண்டுள்ளன. இது சோவியத்து ஒன்றியம் முழுவதற்கும் ஒன்றானதன்று.

சோவியத்து ஒன்றியத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பு 45 மொழிகளிலும், வானொலி ஒலிபரப்பு 71 மொழிகளிலும் நடைபெறுகின்றன.

பள்ளிகளில் 55 மொழிகளில் கல்வி கற்பிக்கப் படுகிறதெனினும் சில பள்ளிகளில் வட்டார மொழிகளிலும், சில பள்ளிகளில் இரு மொழிகளிலும் பாடங்கள் நடத்தப் படுகின்றன. எந்தப் பள்ளியில் சேர வேண்டுமென்பதைப் பெற்றோர்களே தீர்மானிக்கிறார்கள், கடந்த சில ஆண்டுகளில், வட்டார மொழிகளில் மாணவர்கள் கண்டிப்பாகக் கற்க வேண்டும் என்னும் கருத்து பெற்றோர்களுடையே வலுப்பெற்று வருகிறது.

சோவியத்து அரசியல் முறையின் செயல்பாட்டிற்கு உருசிய மொழி முதாமையான உறுப்பாக விளங்குகிறது. பல்வேறு தேசிய இன மக்களையும் பல்வேறு மொழி பேசும் மக்களையும் கொண்ட சோவியத்து நாடாளுமன்றத்தின் கூட்டங்களை நடத்துவதற்கு ஒரு பொது மொழி தேவையாகிறது. எனவே சோவியத்து ஒன்றியத்தில் பெரும்பான்மையான மக்கள் இரு மொழிகளை அஃதாவது உருசிய மொழியையும், வட்டார மொழியையும் பேசுகிறார்கள்.

உருசிய மொழியறிவு எல்லாக் குடியரசுகளிலும் ஒரே மாதிரியாக இல்லை. எடுத்துக் காட்டாக, பைலோ உருசியக் குடியரசில் உள்ள இளைஞர்கள் உருசிய மொழி நன்கு அறிந்திருக்கின்றனர். ஆனால், அவர்கள் தங்கள் தாய்மொழியில் அதிக அக்கறை காட்டுவதில்லை என்று குற்றஞ்சாட்டப் படுகின்றனர்.

உருசிய மொழியைப் பொறுத்த வரையில் அது, உள்நாட்டில் பல்வேறு தேசிய இன மக்களுக்கிடையேயும் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவதோடு மட்டுமல்லாமல், உலக ஒன்றிய நாடுகள் முதலிய அனைத்துலக நிறுவனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இதனால்தான் வெளிநாடுகளிலும் இந்த மொழியின் சாய்கால் அதிகரித்து வருகிறது. ஏறத்தாழ நூற்றுக்கு அதிகமான நாடுகளில் பல்வேறு நிறுவன அமைப்புகளின் மூலம் உருசிய மொழி பயிலப் படுகிறது. 54 நாடுகளில் உருசிய மொழியானது, பள்ளிக்கூடப் பாடத் திட்டத்திலும், 79 நாடுகளில் உயர் கல்வி நிறுவனங்களின் பாடத் திட்டங்களிலும் இடம் பெற்றுள்ளது. மொத்தத்தில் உலகம் முழுவதிலும், 50 கோடிப் பேர் பல்வேறு அளவுகளில் உருசிய மொழியை அறிந்திருக்கின்றனர் என்று உருசியச் செய்தி நிறுவனம் கூறுகிறது.

பின் குறிப்பு: சோவியத்து ஒன்றியத்தில் உருசிய மொழி ஒரு வல்லாளுமை மொழியாக வளர்த்தெடுக்கப் படுகிறது. அதன் வளர்ச்சிக்கும் ஆளுமைக்கும் செய்யப்படும் முயற்சிகள், பிற தேசிய இன மொழிகளைப் பின்னடையச் செய்கின்றன என்று பல்வேறு வகையான குற்றச்சாட்டுகள் கூறப்பெறுகின்றன. இதையெல்லாம் எதிரிநாடுகளின் பொய்ப் பரப்பல்கள் என்று உருசியா மழுப்பி வருகிறது.

ஆனாலும் உண்மை வேறாக உள்ளது என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன. இவ்விடத்-

தமிழ் இன விடுதலைக் கழகம் நிறைவேற்றிய தீர்மானங்கள்!

மயிலாடுதுறையில் உள்ள தமிழ் இன விடுதலைக் கழகம், கடந்த சூலை 1, 2, 1989 காரி, ஞாயிறு நாள்களில் நடத்திய முதல் மாநில மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்கள் பின்வருமாறு:

I: 1-7-89 காலை நடந்த மாணவர் மாநாட்டின் தீர்மானங்கள்:

1. அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி 14 அகவைக்கு உட்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வி அளிக்காமல் 40 ஆண்டுகளைக் கழித்து விட்ட நடுவண் அரசை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. அரசியல் சட்டத்தை அவமதித்த குற்றச்சாட்டை இம் மாநாடு நடுவண் அரசின் மீதும் இந்தியத் தலைமை அமைச்சர், குடியரசு தலைவர் ஆகியோரின் மீதும் சுமத்துகிறது.

2. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நடுவண் அரசில் கிடைக்க வேண்டிய உரிய பங்குகளை, வேலை வாய்ப்பை மறுப்பதுடன் (குறிப்பாக CLASS I & II) அரசியல் சட்டத்தின் பிரிவுகளின்படி அமைக்கப்பட்ட காக்கா கலேல்கர், மண்டல் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்தாமல் நடுவண் அரசு ஏமாற்றுச் செய்துள்ளது என்றும், அதன் வழி சட்டத்தை அவமதித்துள்ளது என்றும் குற்றச்சாட்டுகளை இம் மாநாடு நடுவண் அரசு மேல் சுமத்துகிறது.

3. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வன்முறை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டதாக பல்வேறு ஒன்றுமறியா மாணவர்கள் மீதும், ஈழப் போராளிகளின் மீதும் உண்மைக்கு மாறுக வழக்குத் தொடுத்துத்தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்படி சிறையில் இந்த அரசு அடைத்து வைத்துள்ளதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. பல வழக்குகளில் ஓராண்டுக்கு மேலாக ஆகியும் குற்ற அறிக்கையை அற மன்றங்களில் முறை செய்யப்படாமல் ஆண்டுக் கணக்கில் பலரைச் சிறையில் அடைத்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறது. எனவே தேசியப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள அனைத்துத் தோழர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமை கோரி எழுச்சியுற்றுக் கிளர்ச்சி செய்வதை அடக்கி ஒடுக்க "குண்டர் சட்டத்தைப் பயன்படுத்துவதை இம் மாநாடு கண்டிப்பதுடன் அவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்குமாறு கோருகிறது.

5. அரசியல் சட்டத்தில் 18 அகவைக்கு மேற்பட்ட ஆண், பெண் அனைவருக்கும் வேலை பெறும் வாய்ப்பை **"அடிப்படை உரிமை"**யாகச் செய்யுமாறு, அரசியல் சட்டத்தைத் திருத்துமாறு கோருகிறது.

6. கல்வியைக் குறிப்பாக வணிக, தொழிற் கல்விகளை வணிகமாக்கும் தனியார் துறை போக்கை வன்மையாக கண்டிப்பதுடன் பொறியியல், மருத்துவத்துறை, சட்டத்துறை, தனியார் கல்வி நிறுவனங்களை உடனடியாக அரசு ஏற்று நடத்துமாறு கோருகிறது.

7. ஆங்கில "பிரிட்டிசு" வல்லரசின் சுரண்டல் ஆட்சி அதிகாரத்தை நடைமுறைப் படுத்திட வேண்டிய ஏவலர்களை-கூலிப்படைகளை உருவாக்குவதற்காகத் திணிக்கப்பட்ட **மெக்காலே** கல்வி முறையே இன்றும் நடைமுறையில் உள்ளது. சிந்தனையை வளர்க்காத, குருட்டு மனப்பாடம் செய்யும் முறையில் பாடத் திட்டத்தை அமைத்துள்ளது. அதுவே தகுதி, திறமை என்று பாராட்டப்படுகிறது. திட்டமிட்டு மாணவர்களின் மூளை வளர்ச்சியைத் தடுக்கும், மழுங்கடிக்கச் செய்யும் இந்தக் கல்வி முறையை மேலும் வளர்த்து எடுக்க, "புதிய கல்விக் கொள்கை" என்னும் பெயரால் ஒரு கல்வி முறை திணிக்கப்படுகிறது. மேற்கத்திய வல்லாளுமை நாடுகளில், மற்றும் இந்திய ஆளும் கும்பலின் கொள்ளைக்காகப் பணி புரியும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளும் ஊழியர்களை உருவாக்குவதன் நோக்கமாகக் கல்வித் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மாணவ மாணவிகளின் வாழ்வைச் சீரழிக்கும் இக் கல்வி முறைகளை மாற்றித் தமிழக மக்களின் பண்பாடு, நாகரிகம், கலை வாழ்வியல் மேம்பாடு முதலியவற்றை வளர்த்தெடுக்க வழிவகுக்கும் வகையில் கல்வி முறையை மாற்றத் தமிழக அரசை மாநாடு கேட்டுக் கொள்கிறது. புதிய கல்விக் கொள்கை இந்தியைப் புகுத்தித் தாய்மொழியாகிய தமிழை அழிக்கும் நோக்கம் கொண்ட ஒன்றாகும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தில் நாம் இன்னென்றையும் தெளிவாகக் குறிப்பிட முடியும். இந்தியாவில் எவ்வாறு வடவிந்திய அரசு இந்திமொழி வல்லாண்மையை வலுப்படுத்த பல்வேறு வகையான சூழ்ச்சிகளையும் பொருட் செலவுகளையும் செய்து வருகிறதோ, அவ்வத்தனை நடை முறைகளும் உருசியாவில் உருசிய மொழி வல்லாளுமைக்குச் செய்யப்படும் முயற்சிகளைப் பின் பற்றியனவே என்று துணிந்து கூறலாம். O

... முறையில் அதைத் தடுத்து நிறுத்த உடனடியாகத் தமிழக அரசு செயல்படக் கோரப்படுகிறது.

8. தமிழகத்தின் இளைஞர்களையும், மாணவர்களையும் பெரும் சீரழிவுக்கு உள்ளாக்கும் போதை மற்றும் அருவருக்கத்தக்க கலைப்பண்புகளைத் தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

2. அன்று மாலை 4 மணியளவில் நடந்த 'தமிழ் பயிற்று மொழி மாநாட்'டில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. இந்திய அரசியல் சட்டம் 17-ஆவது பிரிவில் (Part 17) ஒரு தேசிய இனத்தின் மொழியான இந்தியை மட்டும் ஆட்சிமொழி என்பதை நீக்கி விடுவது மட்டும் அல்லாமல், அனைத்து 14 தேசிய மொழிகளும் ஆட்சி மொழியாகும் வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதுடன் அதன் விளைவு குறித்து எச்சரிக்கை செய்யவும் இம் மாநாடு விரும்புகிறது.

2. எல்லா நிலைப்படிப்பும் தமிழ் வழி நடத்தப்பட வேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்துவதுடன் மேலும் தமிழ் வழி படித்தவர்களுக்கு மட்டுமே வேலையில் முன்னுரிமை தரப்பட வேண்டும் எனவும், தமிழகத்துப் பள்ளிகளில் ஆங்கிலப் பாட மொழியை நீக்க வேண்டும் எனவும் தமிழக அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது. தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகவும் அலுவலக மொழியாகவும் ஏற்றுக் கொண்டு அதை நிறைவேற்றும் வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும்படி இம்மாநாடு வற்புறுத்துகிறது.

3. அனைத்து இந்திய வானொலி, வானொளி நிலையங்கள் தமிழ்மொழி, கலை, தமிழர்பண்பாடு, நாகரீகம் வளர, வளர்க்கப் பாடுபடாமல், மாறாகத் திட்டமிட்டு அழித்து, இந்திக் கலை, பண்பாட்டையும் ஆரியப் பண்பாட்டையும் புகுத்தும் இராமாயண, பாரதக் கதைகளை வலியுறுத்தி வருவதால் தமிழுக்கு உரிய இடம் அளிக்கும் வகையில், தமிழக அரசு தனியே வானொலி, வானொளி நிலையங்கள் அமைக்கும் படியும் அல்லது இரண்டாவது தமிழ்ப்பிரிவு (Channel) அமைக்க இம் மாநாடு தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது. அரசியல் சட்டம் குறுக்கிடுமானால் அதைத் திருத்தவும், போராடவும் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது.

4. "பாரதிதாசன்" பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்திலிருந்து "தமிழ் இயக்கம்" என்ற நூலை நீக்கிவிட்ட காரணத்தை மீண்டும் ஆய்வு செய்து அதைப் பாடத்திட்டத்தில் உடனடியாகச் சேர்க்கவேண்டும் எனத் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறது. (தொடரும்)

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு • 44

குற்றவாளியைத் திருத்துகின்ற நடைமுறை எதுவோ அதுவே தண்டனையாக இருத்தல் வேண்டும். பிறவெல்லாம் அவனை ஊக்குவிப்பனவே!

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 127.

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு: 1-00
ஆண்டுக் கட்டணம் உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 25-00

பெறுநர்:
திரு. / திருவாட்டி

நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657